

தமிழ்நாடு அரசின் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று முன்தினம் (25.07.2024) புதுதில்லியில், ஒன்றிய அரசின் ஜல் சக்தி துறை அமைச்சர் சி.ஆர். பாட்டீல் அவர்கள் மற்றும் ஒன்றிய ஜல் சக்தி துறை இணை அமைச்சர்கள் வி. சோமண்ணா, ராஜ் பூஷன் சௌத்திரி ஆகியோரை சந்தித்து, தமிழ்நாட்டின் பன்மாநில நதிநீர் பிரச்சினைகள், நதிநீர் இணைப்பு திட்டங்களை செயல்படுத்துதல், பாசன கட்டமைப்புகளை சீரமைக்கும் திட்டங்களுக்கு நிதியுதவி பெறுதல் ஆகிய கோரிக்கைகள் அடங்கிய மனுவினை வழங்கினார். இந்நிகழ்வின் போது தமிழ்நாடு அரசின் புதுதில்லிக்கான சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், தமிழ்நாடு அரசின் நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், தமிழ்நாடு அரசின் கூடுதல் உள்ளுறை ஆணையாளர் (தமிழ்நாடு ஆணையாளர் (தமிழ்நாடு இல்லம்) ஆஷிஷ் குமார், காவிரி தொழில்நுட்பக் குழு தலைவர் ஆர்.சுப்பிரமணியன் ஆகியோர் உடனிருந்தனர்.



கீழ்பென்னாத்தூர் தொகுதிக்குட்பட்ட கீழ்பென்னாத்தூர் பேரூராட்சி மற்றும் துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம் ஊசாம்பாடி கிராமத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட சிறப்பு முகாம்களில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி கலந்து கொண்டார். மேலும் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட தகுதியான மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட துறைகளின் மூலம் உடனடி தீர்வு கண்டு அதற்கான சான்றிதழ்களையும் பயனாளிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி ஆறுமுகம், பாரதிராமஜெயம், இரா.ராஜேந்திரன், ஒன்றிய குழுத் தலைவர்கள் தமயந்தி ஏழுமலை, அய்யாகண்ணு, பொதுக்குழு உறுப்பினர் பாலு, ஒன்றிய பிரதிநிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### நிலத்தடி மின்னணு காப்பீட்டு முறையில்

# வாடிக்கையாளர்களுக்கான பயன்பாடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளதா?

## மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 27-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் மக்களவையில், இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை ஆணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ள மின்னணு காப்பீட்டு முறையினால் வாடிக்கையாளர்களுக்கான பயன்பாடுகள் அதிகரித்துள்ளனவா? என்றும் அதன் விவரங்களை தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய நிதித் துறை இணை அமைச்சர் பங்கஜ் சௌத்திரி கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய இணை அமைச்சர் பங்கஜ் சௌத்ரி அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:

வாடிக்கையாளர்களுக்கான மின்னணு காப்பீட்டு முறையை அறிமுகப்படுத்த தேவையான கொள்கை முடிவுகளை கடந்த ஏப்ரல் 2024-ல், இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையம் உறுதி செய்துள்ளது என்றும், இக்கொள்கையின்படி, ஒவ்வொரு காப்பீட்டு நிறுவனமும் மின்னணு முறையில் காப்பீடு செய்வதற்கான வசதிகளை வாடிக்கையாளர்களுக்கு ஏற்படுத்தி தர வேண்டுமென்றும், அதற்கான கணிணி பாதுகாப்பு முறைகளை வசதி செய்து தர வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும், வாடிக்கையாளர்கள் கேட்டுக்கொள்ளும் பட்சத்தில் வழக்கமான நடைமுறைகளையும் உறுதி செய்ய வேண்டும் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாகவும் மத்திய இணையமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.



மேலும், மின்னணு காப்பீட்டு முறையில் அனைத்து வாடிக்கையாளர்களையும் காப்பீட்டு முறை சென்றடையும் என்றும், புதுப்பிக்கவும், காப்பீட்டு கோருவதையும் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது என்றும் காப்பீட்டு நிறுவனங்களின் செலவீனம் வெகுவாக குறைக்கப்படும் என்றும் வழக்கமான முறைகளில், தேவையான சான்றிதழ்கள் கிடைக்காமல் போவது தவிர்க்கப்படும் என்றும், இதனால் பல்வேறு வகைகள வாடிக்கையாளர்களின் பயன்பாடுகள் மின்னணு காப்பீட்டு முறையினால் உறுதி செய்யப்படும் என்றும் ஒன்றிய நிதித்துறை இணைஅமைச்சர் பங்கஜ் சௌத்திரி பதில் அளித்தார்.

## வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !




### ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# புதுக்கோட்டை வடக்கு - தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!

புதுக்கோட்டை, ஜூலை 27 -

தலைமை கழக அறிவிப்புக்கு இணங்க தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கும் பாஜக ஒன்றிய அரசை கண்டித்து இன்று (27ஆம் தேதி) புதுக்கோட்டை வடக்கு மற்றும் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட திமுக சார்பில் புதுக்கோட்டை திலகர் திடலில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்றும், இதில் கழகத்தினர் பெரும் திரளாக அலைகடலென திரண்டு வந்து பங்கேற்குமாறும் சட்டத்துறை அமைச்சர், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் எஸ். ரகுபதி , புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

அதன் விபரம் வருமாறு:

தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசு நிதி நிலை அறிக்கையிலும் தமது வஞ்சத்தை காட்டி உள்ளது. ஒருநாட்டின் நிதி நிலை அறிக்கை சமச்சீராக இந்தியா முழுவதிலும் உள்ள அனைத்து மாநிலங்கள் பயன் பெறும் வகையில் அமைய வேண்டும், பாசிச பாஜக ஒன்றிய அரசு தங்கள் ஆட்சியை காப்பாற்றிக் கொள்வதற்காக சில மாநிலங்களுக்கு மட்டும் நிதியை அள்ளிக் கொடுத் துள்ளது. நாட்டின் வளர்ச்சிக்கு மாபெரும் பங்கு வகிக்கும் தமிழ்நாடு போன்ற சில மாநிலங்கள் மீது வன்மத்தை கக்கி வருகிறது. மெட்ரோ ரயில் திட்டம் மற்றும் தமிழ்நாடு சந்தித்த இரண்டு தொடர் பேரிடர் இழப்புகளுக்கு நிதி ஒதுக்கீடு கோரி பலமுறை கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோரிக்கை வைத்தும் எந்த பயனும் இல்லை. இப்படி தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வருவது பாசிச பாஜக ஒன்றிய அரசின் மக்கள் விரோத போக்காகும்.





ஒன்றிய அரசின் நிதி நிலை அறிக்கையின் வஞ்சத்தை கண்டிக்கும் வகையில் தலைமைக் கழகத்தின் அறிவிப்புக்கு இணங்க இன்று (27.07.2024 -சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட திமுக சார்பில் புதுக் கோட்டை திலகர் திடலில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. ஆர்ப்பாட்டத்தில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தை சேர்ந்த மாநில, மாவட்ட நிர்வாகிகள். மாநகர, ஒன்றிய, நகர,பேரூர், வட்ட கழக, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் , இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள், துணை தலைவர்கள், மாவட்ட பிரதிநிதிகள், கழக முன்னோர்கள், செயல்வீரர்கள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் எஸ். ரகுபதி , புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் ஆகியோர் கூறி உள்ளனர்.

# கடலூர் - மஞ்சக்குப்பத்தில் இன்று ஆர்ப்பாட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!

கடலூர், ஜூலை 27 -

கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முதலமைச்சர், கழக தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கடலூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் இன்று (27.7.2024 - சனிக்கிழமை) காலை 9:00 மணிக்கு கடலூர் மஞ்சக்குப்பம் தலைமை தபால் நிலையம் அருகில் நடைபெறுகிறது.

அதுசமயம், ஆர்ப்பாட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர மேயர், முன்னாள், இந்நாள் ஒன்றிய பெருந்தலைவர்கள், நகரமன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள். வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.



இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

திருச்சி, ஜூலை 27-

திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், பாசிச பா.ஜ.க. அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (27.07.2024 - சனிக்கிழமை) காலை 9.30 மணிக்கு திருச்சி தெப்பக்குளம் தபால் நிலையம் அருகில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவா ணன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் எஸ். இனிகோ இருதயராஜ் முன்னிலையில் நடைபெறுகிறது.



கழக தலைவர் அவர்களின் வழிக்காட்டுதல்படி, ஒரு நாட்டின் நிதிநிலை அறிக்கை என்பது இந்திய திருநாட்டில் அனைத்து மாநிலங்களுக்கும் உரிய பங்கினை பகிர்ந்து நாடு முழுவதும் சமச்சீரான வளர்ச்சியே உருவாக்கி உதவுவதுடன் நாட்டில் வாழும் கடைக்கோடி மனிதர்களின் வாழ்வை மேம்படுத்தும் கொள்கைப் பிரகடனமாகவே இருக்க வேண்டும்.

ஆனால் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதி நிலை அறிக்கை ஒட்டு மொத்த இந்திய நாட்டிற்கான நிதி நிலையை அறிக்கையாக தெரியவில்லை மாறாக தங்கள் ஆட்சியை காப்பாற்றிக் கொள்வதற்காக சில மாநிலங்கள் மட்டுமே நிதி நிலையை தாராளமாக அளித்து கொடுத்தும் நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்து வரும் தமிழ்நாடு போன்ற மாநிலம் மீது வன்மத்தைக் கக்கிடும் வகையில் இந்த நாட்டின் ஒன்றிய அரசு நிதிநிலை அறிக்கை அமைத்திருக்கின்றது. இதனைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகின்றது.

இந்த நிகழ்வில் மாநில - மாவட்ட - மாநகர நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் கழக தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு!

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், காஞ்சிபுரம் மாநகரத்தைச் சேர்ந்த மாவட்ட பிரதிநிதி எஸ்.வி.பிரகாஷ் மற்றும் மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் கே.ஆர்.டில்லிகுமார் ஆகியோர் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 25.07.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**கட்டடத்துறை**
க.து.ந.க.எண்.பி1/1445/2024

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
கண்காணிப்பு பொறியாளர் (கட்டடம்) அவர்களால் கீழ்கண்ட (இரு உறை முறை) பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

Proposed Construction of LPG and Smoke Free LPG System works Various Zones 02, 03, 07.(Two Cover System)

மேலும் விவரங்களுக்கு http://tntenders.gov.in & www.Chennaicorporation.gov.in இணையதளம் மூலம் பார்த்து தெரிந்து கொள்ளவும்.

| | |
|---|---|
| அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.395.47 இலட்சம்<br>குறைந்த பட்ச பணியின் மதிப்பு ரூ.272.86 இலட்சம் | முன்வைப்பு தொகை :<br>பணியின் மதிப்பு தொகையில் 1% |
| ஒப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : | 22.08.2024 அன்று பிற்பகல் 3.00 மணி வரை |
| ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : | 23.08.2024 அன்று பிற்பகல் 3.30 மணி வரை |

செ.ம.தொ.இ /2614/ஒப்பந்தப்புள்ளி/2024 **கண்காணிப்பு பொறியாளர் (கட்டடம்)**



சேலம் கிழக்கு மாவட்டம் தம்மம்பட்டி பேரூராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட சுற்றுச்சூழல் அணி மற்றும் ஆத்தூர் வட்ட சட்டக் குழுவோடு இணைந்து சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, சட்ட விழிப்புணர்வு மற்றும் மது போதை தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு ஆத்தூர் சார்பு நீதி மன்ற நீதி அரசர் ஆனந்த் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களிடையே விழிப்புணர்வு ஆற்றினார் .இதில் ஆத்தூர் சட்டப் பணி குழுவைச் சார்ந்த வழக்கறிஞர்கள், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் முனைவர் வரத. ராஜசேகர்,செம்முகில் ராசாலிங்கம், சுற்றுச்சூழல் அணியின் நிர்வாகிகள் சந்திரசேகரன், அப்சரலி, ராஜகோபால் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.